**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோத்தகிரி</u>**

**<u>O.S.No. 19/2025</u>**

**2026 –ம் வருடம் ஜுலை திங்கள் 23ம் நாள் வியாழக்கிழமை வாதி சாட்சி PW1 ஆக நிலை 3 பெஞ்ச் கிளர்க் திருமதி. M. கிருத்திகா என்பவரால் சத்தியபிரமாணம் செய்து விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**திரு. காரி த/பெ. மடியாகவுடர் வயது. 65 ஊர். கண்ணேரிமுக்கு**

**-----------------------------------------------------------------------**

**வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>PW1 குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி 03.30 P.M.</u>**

1. நான் அனுப்பிய அறிவிப்பிலும், வழக்கிலும் யார் முன்னிலையில் எப்போது ஆவணத்தை உரிமையாளரிடம் இருந்து வாங்கினேன் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அதே போல் நான் அனுப்பிய அறிவிப்பிலும், வழக்கிலும் யார் முன்னிலையில் எப்போது ஆவணத்தை பிரதிவாதிக்கு கொடுத்தேன் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் வாங்கினேன் என்பதற்கோ நில உரிமையாளர் விற்றார் என்பதற்கும் எந்தவித ஆவணமும் இல்லை என்று சொன்னால் சரிதான். யாருடைய சொத்தை வாங்குவதாக நான் அனுப்பிய அறிவிப்பிலும், வழக்கிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கில் ஒரு வாரத்தில் திருப்பி தருவதாக சொல்லி வாங்கினார் என்று கூறியுள்ள நிலையில் அறிவிப்பில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. 5 வருடங்களாக எந்த வழக்கும் போடவில்லை என்றாலும், காவல்

நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் சரிதான். அந்த ஆவணத்தை வைத்து நில உரிமையாளரை தவிர வேறுயாரும் எதுவும் சட்டப்படி செய்யமுடியாது என்று சொன்னால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த ஆவணமும் என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும், பொய்யான வழக்கு தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உரிமையாளர் தவிர வேறு யாருக்கும் இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்தவிதமான அருகதையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the Plaintiff / Plaintiff's Counsel and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 23.07.2026**
**District Munsif,**
**Kotagiri.**